RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 189 | ஜூலை.12 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## திமுக அரசு புதிய திட்டங்களை அறிவிப்பது மக்களை ஏமாற்றும் செயல்: டிடிவி தினகரன்



சென்னை: ஜூலை.12-

நான்காண்டு கால ஆட்சியில் எந்தவொரு நலத்திட்டத்தையும் முழுமையாக செயல்படுத்தாத திமுக அரசு, தற்போது நாள்தோறும் புதிய திட்டங்களை அறிவிப்பது மக்களை ஏமாற்றும் செயல் என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழகத்தில் மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் இல்லங்களுக்கே நேரடியாக சென்று ரேஷன் பொருட்கள் விநியோகிக்கும் திட்டத்தை வரும் ஆகஸ்ட் 15 ஆம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்க இருப்பதாக நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஏழை, எளிய, சாமானிய மக்கள் பயன்பெறும் வகையில் தொடங்கப்பட்ட நியாயவிலைக்கடைகளில் தரமான அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கவோ, ஊழியர்கள் பற்றாக்குறையை போக்கவோ எந்தவித நடவடிக்கையும் எடுக்காத திமுக அரசு, தற்போது தேர்தல் நெருங்கும் வேளையில் இதுபோன்ற திட்டங்களை அறிவிப்பது விளம்பரத்திற்காக உதவுமே தவிர மக்களுக்கு முழுமையான பயனை தராது.

திமுக தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றிருந்த 236வது வாக்குறுதியான பல துறைகளின் கீழ் உள்ள நியாய விலைக்கடைகள் ஒரே துறையின் கீழ் கொண்டு வரப்படும், 239வது வாக்குறுதியான மானிய விலையில் மூன்று லிணிஞ் பல்புகள் விநியோகம் செய்யப்படும், 240 வது வாக்குறுதியான சர்க்கரையின் அளவு உயர்த்தப்படும், உளுத்தம்பருப்பு மீண்டும் வழங்கப்படும் போன்றவற்றில் ஒன்றைக்கூட நிறைவேற்றாமல் தற்போது வீடுவீடாக ரேசன் பொருட்கள் விநியோகம் என்பது மக்களை ஏமாற்றும் செயலாகும்.

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக "உங்கள் தொகுதியில் ஸ்டாலின்" எனும் தலைப்பில் ஊர் ஊராக பெட்டி வைத்து பெறப்பட்ட லட்சக்கணக்கான மனுக்களின் நிலை என்னவென்றே தெரியாத நிலையில், தற்போது அடுத்த தேர்தலை மையமாக வைத்து "உங்களுடன் ஸ்டாலின்" எனும் பெயரில் பெறப்படும் மனுக்களுக்கு மட்டும் எப்படி தீர்வு கிடைக்கும் ? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

எனவே, இனியும் நாள்தோறும் ஒரு புதிய திட்டத்தை அறிவித்து மக்களை ஏமாற்றுவதையும், அதற்கென பலகோடி ரூபாய் செலவு செய்து மக்கள் வரிப்பணத்தை வீணடிப்பதையும் நிறுத்திவிட்டு, எஞ்சியிருக்கும் ஆட்சிக்காலத்திலாவது தேர்தலுக்கு முன்பாக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முன்வர வேண்டும் என திமுக அரசை வலியுறுத்துகிறேன்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வாரிசு அரசியலுக்காக துரோகி பட்டம் கட்டுகிறார் வைகோ: மல்லை சத்யா வேதனை



சென்னை: ஜூலை.12-

வாரிசு அரசியலுக்காக துரோகி பட்டம் கட்டுகிறார் என மதிமுக பொதுச்செயலாளர் வைகோ குற்றச்சாட்டு குறித்து துணை பொதுச்செயலாளர் மல்லை சத்யா வேதனை தெரிவித்துள்ளார். மதிமுக துணை பொதுச்செயலாளர் மல்லை சத்யா மற்றும் முதன்மைச் செயலாளர் துரை வைகோ இடையேயான பனிப்போர் அண்மையில் மூத்த நிர்வாகிகள் மத்தியில் முடித்து வைக்கப்பட்டது.

இருப்பினும் அது தொடர்ந் ததாகவே தெரிகிறது. இது பொதுச்செயலாளர் வரை மீண்டும் சென்ற நிலையில், கடந்த ஜூன் 29ம் தேதி நடைபெற்ற மதிமுக நிர்வாகக் குழு கூட்டத்தில், மல்லை சத்யாவை வைகோ கடுமையாக விமர்சித்ததாகவும், அவரை விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பிரபாகரனுக்கு துரோகம் செய்த மாத்தையாவுடன் ஒப்பிட்டுப் பேசியதாகவும் கூறப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக பூந்தமல்லியில் நேற்று நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் மல்லை சத்யாவின் புகைப்படம் முற்றிலும் தவிர்க்கப்பட்டிருந்தது.

குழப்பம் ஏற்படுத்த முயற்சி இந்நிலையில், மல்லை சத்யா குறித்து சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் மதிமுக பொதுச்செயலாளர் வைகோ கூறியதாவது: மல்லை சத்யாவை என் உடன்பிறவாத தம்பியைப் போல நடத்தி வந்தேன். மதிமுகவுக்கு ஏற்கெனவே துரோகம் இழைத்து, கட்சியை பாழ்படுத்தலாம் என்று நினைத்து வெளியேறிய சிலரோடு நெருக்கமாக அவர் தொடர்பு வைத்துள்ளார். என்னைப் பற்றி சமூக வலைதளங்களில் மோசமான வகைகள் பதிவிடும் நபர்களுடனும் நெருக்கமாகப் பழகி வருகிறார். இவர் கொடுக்கும் தகவல்களை தான் அவர்கள் பதிவிடுகின்றனர்.

இதை ஆதாரத்துடன் என்னிடம் நிர்வாகிகள் கூறினர். 7 முறை வெளி நாடுகளுக்கு சென்றபோது கூட அவர் மதிமுக துணை பொதுச்செயலாளர் என்று குறிப்பிட வில்லை. என் பெயரையும் எங்கேயும் உச்சரிக்கவில்லை. மதிமுகவுக்குள்ளேயே குழப்பத்தை ஏற்படுத்த முயற்சித்தார். அது நடக்கவில்லை. இந்த விவகாரம் மதிமுகவுக்கு பெரிய சோதனையாக வரக்கூடாது என்பதை தெளிவுபடுத்துவதற்காக நிர்வாகக் குழுவில் எடுத்துரைத்தேன். இதற்கு, மேல் மல்லை சத்யா, அவர் விருப்பப்படி நடந்து கொள்ளலாம் என்றும் தெரிவித்தேன்.

பின்னணியில் திமுக இல்லை அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கட்சியினர் வலியுறுத்தினாலும், நான் எடுக்கவில்லை. என் உயிரைக் காப்பாற்றிய, கட்சிக்கு விசுவாசமாக இருந்த மல்லை சத்யா, கடந்த 2 ஆண்டுகளாக அப்படியே தலைகீழாக ஏன் மாறினார்? அவர் பட்டியலினத்தவர் என்பதால் ஒதுக்கப்படுவதாகவும் செய்தி பரப்பினார். இந்த விவகாரத்தில் திமுக பின்னணியில் இருப்பதாகக் கூற முடியாது. மதிமுகவின் முத்துரத்தினம், முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி வற்புறுத்தியதன் பேரில் திமுகவில் சேர்க்கப்பட்டார். மதிமுகவில் எந்த நெருக்கடியும் ஏற்படவில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து மல்லை சத்யா, ''குடும்ப அரசியலை எதிர்த்து கட்சி தொடங்கிய வைகோ, துரை வைகோவுக்காக எனக்கு துரோகி பட்டம் கொடுத்து வெளியேற்றப் பார்க்கிறார். வைகோவின் உயிரை 3 முறை காப்பாற்றிய என்னை வாரிசு அரசியலுக்காக துரோகி என சொல்லும் அளவுக்கு துணிந்துள்ளார்'' என வருத்தம் தெரிவித்ததாக அவரது ஆதரவாளர்கள் தெரிவித்தனர். இதற்கிடையே, மல்லை சத்யா தலைமையில் மதிமுகவுக்குள் ளேயே மற்றொரு அணி வளர்ந்து வருவதாகவும், திமுக, தவெக, பாஜக போன்ற மாற்றுக் கட்சியில் இணைவது தொடர்பாக அவர் ஆலோசித்து வருவதாகவும் அரசியல் வட்டாரத்தில் பேசப்படுகிறது.

## தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் தொய்வின்றி நடைபெற வேண்டும்... ரூ.2.15 கோடி வழங்கிய முதலமைச்சர் !

சென்னை, ஜூலை.12-

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் தொய்வின்றி நடைபெற, தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களிடம் ரூ.2.15 கோடிக்கான காசோலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "அனைத்து அறிவுத் துறைகளிலும் தமிழ் வளர்ச்சி காணவேண்டும் என்ற தலையாய நோக்கத்தோடு 1946ஆம் ஆண்டில் சென்னை மாநிலக் கல்வி அமைச்சராகத் திகழ்ந்த தி.சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களால் தமிழ் வளர்ச்சிக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் உயர் குறிக்கோளாகிய கலைக் களஞ்சியத் திட்டத்தை தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள் இந்திய விடுதலை நாளான 15.08.1947 அன்று அறிவித்தார். தமிழ் வளர்ச்சியில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட அனைத்துத் தரப்பு மக்களும் அவருடைய இந்த அறிவிப்பை மெத்த மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் 20.10.1947இல் கலைக்களஞ்சியப் பணி தொடங்கப் பெற்றது. அன்றைய துணைவேந்தர் முனைவர் ஆ. இலக்குமணசாமி அவர்கள் தலைமையில் கலைக்களஞ் சிய உருவாக்கத்திற்கு 'அறிஞர் குழு' ஒன்று அமைக்கப்பட்டது. பேராசிரியர் மு.வரதராசன், பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை, பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், டி.கே. சிதம்பரநாத முதலியார் ஆகியோர் இக்குழுவில் உறுப்பினர்களாக இடம்பெற்றனர்.




கல்கி ரா. கிருஷ்ண மூர்த்தியும் பேராசிரியர் கே. சுவாமிநாதனும் இக்குழுவின் செயலாளர்களாக நியமிக்கப் பெற்றனர். ம.ப. பெரியசாமித்தூரன் அவர்கள் கலைக்களஞ்சியத்தின் தலைமைப் பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்றார். சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்திற்குரிய இடத்தைத் தந்து உதவியது.

தமிழில் கலைக்களஞ் சியத்தைப் பத்துத் தொகுதிகளாக கொண்டுவரவேண்டுமென்று திட்டமிடப்பட்டது. ஒவ்வொரு தொகுதியும் ஏறத்தாழ 750 பக்கங்களைக் கொண்டதாகவும், பொதுமக்களுக்கும் விளங்கக்கூடிய நடையில், அறிவுத் துறைகள் அனைத்தையும் திறம்பட எடுத்துரைப்பதாகவும், பல்துறை அறிவு பற்றிய பதிவுகளை அகரவரிசைப்படுத்தி, அவற்றைக் கட்டுரை வடிவில் தெளிவாக விளக்குவதாகவும் அமைந்த சிறப்பானதோர் அறிவுக் கருவூலமாகக் கலைக்களஞ் சியத்தை உருவாக்க வேண்டும் என்றும் திட்டமிடப்பட்டது.

முதல் தொகுப்பு, அதன் பணி தொடங்கி 6 ஆண்டுகட்குப் பின் 1954 இல், 742 பக்கங்களுடன் வெளிவந்தது. இதற்கு 207 அறிஞர்கள், அவரவர் நிபுணத்துவம் பெற்ற துறைகளில் கட்டுரைகள் வழங்கியுள்ளனர். பணி தொய்வின்றித் தொடர்ந்து நடந்தது.1968இல் 10ஆம் தொகுதி (இணைப்புத் தொகுதி) வெளியாயிற்று. இவற்றுள் 5ஆவது தொகுதியை அன்றைய இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் வெளியிட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இது கலைக்களஞ்சிய ஆக்கப்பணிக்குப் பெருமை சேர்த்தது.

இந்திய மொழிகளில் 10 தொகுதிகளைக் கொண்ட விரிவான கலைக்களஞ்சியம் தமிழில் தான் முதன் முதலாக வந்தது என்பது பெருமிதமான செயலாகும். இதைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஆக்கபூர்வமான தமிழ்த் தொண்டாகும். இவற்றிற்கு 2240 அறிஞர்கள் பங்களிப்புச் செய்திருக்கின்றனர். தமிழ் வளர்ச்சிக்கழகம் வாயிலாக இதுவரை 60 நூல்கள், கலைக்களஞ்சியக் குறுந்தகடு ஆகியவை வெளியிடப்பட்டுள்ளன.

கன்னித் தமிழ், கணினித் தமிழாகிக் கொண்டிருக்கிறது. மென்தமிழ், மின் தமிழாகிக் கொண்டிருக்கிறது. மின் தமிழாகத் தமிழை முழுவதுமாக மாற்றினால், வரும் தலைமுறைகளுக்கு கருவிகளே தமிழைக் கற்றுக் கொடுக்கும். ஆகவே இப்போது செயற்கை நுண்ணறிவுக்கும் தமிழைக் கொண்டு சேர்க்கும் திட்டப் பணிகளைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் மேற்கொள்ளவும், தொடர்ந்து தொய்வின்றி செயல்படவும் உதவிடும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 15.04.2025ஆம் நாளன்று நடைபெற்ற தமிழ் வளர்ச்சித் துறையின் 2025 2026ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் "தமிழ் வளர்ச்சிக் கழகம் தொய்வின்றி செயற்பட ரூபாய் 2 கோடி வைப்புத் தொகை வழங்கப்படும்" என அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினை செயற்படுத்திட, தமிழ் வளர்ச்சிக் கழகம் தொடர்ந்து தொய்வின்றி செயல்பட்டு தமிழ் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையிலும் 2 கோடி ரூபாய் வைப்புநிதியாக வைத்து அதிலிருந்து வரும் வட்டித்தொகையை மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு தமிழ் வளர்ச்சிக் கழகம் பயன்படுத்திக் கொள்ளும் வகையிலும், 2 கோடியே 15 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களிடம் வழங்கினார்.

## 'கூட்டணி குறித்த விஜய் நிலைப்பாட்டில் மாற்றம் வர வாய்ப்பு' முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி

சிவகாசி: ஜூலை.12-

"தேர்தலுக்கு 8 மாதங்கள் உள்ளதால், இன்னும் பல கட்சிகள் அதிமுக கூட்டணியில் இணைய வாய்ப்புள்ளது. விஜய் நிலைப்பாட்டில் மாற்றம் வர வாய்ப்புள்ளது." என முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி தெரிவித்தார்.

சிவகாசி தனியார் ஹோட்டலில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியின் 'தமிழகத்தை மீட்போம் மக்களை காப்போம்' பேரணி ஏற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நேற்று இரவு நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட முன்னாள் அமைச்சர் கே.டி ராஜேந்திர பாலாஜி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது: ஆட்சிக்கு வந்து 50 மாதங்களை கடந்த பின், தேர்தல் வருவதால் ஓரணியில் தமிழ்நாடு எனக்கூறி மக்களை குழப்ப பார்க்கின்றனர். தமிழ்நாடு மக்கள் வருமானம் இன்று தவித்து வரும் நிலையில் ஸ்டாலின் குடும்பம் தான் ஓரணியில் சுபிட்சமாக உள்ளது.

தெற்கு, வடக்கு எனப் பேசுவது, மொழிப் பிரச்சினையை தூண்டிவிடுவது என்பது தேர்தல்




வரும்போது கருணாநிதி காலம் தொட்டு திமுக கடைபிடிக்கும் உத்தி. தமிழக மக்கள் விழிப்புடன் இருப்பதாலும், எங்கள் கூட்டணி உறுதியாக உள்ளதாலும் 2026 தேர்தலில் அதிமுக வெற்றி பெற்று ஆட்சி அமைப்பது உறுதி.

தமிழ் ஈழத்தை ஆதரிக்கும் திருமாவளவன், இலங்கைத் தமிழர் படுகொலைக்கு காரணமாக இருந்த காங்கிரஸ், திமுக கூட்டணியில் தொடர்வது தான் ஒவ்வாத கூட்டணி. திமுக கூட்டணியில் பிரச்சினை இருந்தால், திருமாவளவன் அதிமுக கூட்டணிக்கு வந்தால் அவரை வரவேற்கத் தயாராக உள்ளோம்.

மாணிக்கம்தாகூர் வெற்றி பெற்றாரா அல்லது வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டாரா என்பது ஆண்டவனுக்கும், ஆட்சியருக்கும் மட்டும்தான் தெரியும். இது குறித்த வழக்கு நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சி இந்தியாவுக்கு அப்பாற்பட்ட கட்சி. தேசியத்தையும், தெய்வீகத்தையும் அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டது அதிமுக பாஜக கூட்டணி.

பட்டாசு தொழிலை பயங்கரவாத தொழிலாக பார்க்கும் நிலை இந்த ஆட்சியில் உள்ளது. பசுமை தீர்ப்பாய உத்தரவின்படி விபத்து உரித்து ஆய்வு செய்து பிரச்சினைகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, தொழிலை நசுக்குகின்ற வேலையை செய்தால் அதிமுக நிச்சயம் எதிர்க்கும்.

'தமிழகத்தை மீட்போம் மக்களை காப்போம்' யாத்திரையில் விருதுநகர் மாவட்டத்தில் ஆகஸ்ட் 4,5,6 மூன்று நாட்கள் சுற்றுப்பயணம் செய்யும் எடப்பாடி பழனிச்சாமி, பட்டாசு தொழிலாளர்கள், விசைத்தறி தொழிலாளர்களை நேரில் சந்தித்து குறைகளை கேட்க உள்ளார்.

தேர்தலுக்கு 8 மாதங்கள் உள்ளதால், இன்னும் பல கட்சிகள் அதிமுக கூட்டணியில் இணைய வாய்ப்புள்ளது. விஜய் நிலைப்பாட்டில் மாற்றம் வர வாய்ப்புள்ளது. இவ்வாறு ராஜேந்திர பாலாஜி பேசினார்.

"கொள்கை எதிரிகள் மற்றும் பிளவுவாத சக்திகளுடன், என்றைக்கும் நேரடியாகவோ, மறைமுகவோ கூட்டணி இல்லை, என்பதில் தவெக மிக உறுதியாக இருக்கிறது. கூட்டணி என்றாலும் தவெக தலைமையில் அமையும் கூட்டணி எப்போதும் திமுக மற்றும் பாஜகவுக்கு எதிரானதாகத் தான் இருக்கும்." என்று அக்கட்சியின் தலைவர் விஜய் அண்மையில் நடந்த தவெக செயற்குழு கூட்டத்தில் கூறியிருந்தது நினைவுகூரத்தக்கது.

## சென்னை: ரேஷன் கார்டை திருத்த 19 இடங்களில் குறைதீர் முகாம்

சென்னை, ஜூலை.12-

தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: ஜூலை மாதத்துக்கான மாதாந்திர பொதுவிநியோகத் திட்ட மக்கள் குறைதீர் முகாம், சென்னையில் உள்ள உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 19 மண்டல உதவி ஆணையாளர் அலுவலகங்களில் நாளை (ஜூலை 12) காலை 10 முதல் பிற்பகல் 1 மணி வரை நடைபெறவுள்ளது.

குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கல், முகவரி மாற்றம், கைப்பேசி எண் பதிவு அல்லது மாற்றம் செய்தல் மற்றும் அங்கீகாரச் சான்று உள்ளிட்ட பொதுவிநியோகத் திட்டம் தொடர்பான சேவைகள் மேற்கொள்ளப் படும். மேலும், பொதுவிநியோகக் கடைகளின் செயல்பாடுகள், குறைபாடுகள் குறித்த புகார்களை தெரிவித்து தீர்வு பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# புரட்சிமிகு வேலூரில் சிப்பாய புரட்சி நினைவுத்தூன் அருகே ஆட்சியர் மலர் வளையம் வைத்து மரியாதை

வேலூர், ஜூலை.12-

வேலூர் மாவட்டம், வேலூர் கோட்டை வடகிழக்கு பகுதியில், புரட்சி மிகு வேலூரில் 1806 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 10 ஆம் நாள் நடைபெற்ற சிப்பாய் புரட்சியில் வீர மரணம் அடைந்த இந்திய வீரர்களுக்கு வேலூர் மக்கான் சந்திப்பில் அமைந்துள்ள சிப்பாய் புரட்சி நினைவுத்தூண் அருகே மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி மலர் வளையம் வைத்து நினைவஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் மக்கள் பிரதிநிதிகள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மதிவாணன், வேலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார், மாநகராட்சி ஆணையாளர் லட்சுமணன், முன்னாள் படை வீரர்கள் நலன் துணை இயக்குநர் லெப்டினன்ட் கர்னல் வேலு, முத்துரங்கம் கல்லூரி மாணவ மாணவிகள் அணிவகுப்பு மரியாதை குழுவினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.







# பெல் ஹோட்டல் மேலாண்மை மற்றும் கேட்டரிங் தொழில்நுட்ப நிறுவனம் - 19வது ஆரம்ப விழா சிறப்பாக நடைபெற்றது

சிவகாசி, ஜூலை.12-

விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் பெல் ஹோட்டல் மேலாண்மை மற்றும் கேட்டரிங் தொழில்நுட்ப நிறுவனம் தனது 19வது ஆரம்ப நாளைக் கோலாகலமாக கொண்டாடியது. இந்நிகழ்ச்சி இன்ஸ்டிட்யூட் வளாகத்தில் காலை சிறப்பாக நடைபெற்றது.

விழா காலை 11.00 மணிக்கு திருவவையாற்றிப் பிரார்த்தனையுடன் தொடங்கியது. இந்தப் பிரார்த்தனையை பெல் மேட்ச் நிறுவன இயக்குனர் வைஜயந்தி வசந்த் ராஜசிங் வழங்கினார். இதைத் தொடர்ந்து, கல்லூரி பிரார்த்தனை மற்றும் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது. முருச்சுடர் விளக்கேற்றி நிகழ்ச்சி ஒரு புனிதத் தொடக்கத்தை பெற்றது.

வணக்க உரையை கல்லூரி பேராசிரியர் அருண் பாபு வழங்கினார். புதிய மாணவர்களுக்கு தமிழ் மொழியில் வணக்கத்தை மூன்றாம் ஆண்டு மாணவர் சிவமணி உரையாற்றினார்.

நிறுவனத்தின் முக்கிய தலைவர்களான நிர்வாக இயக்குனர் ராஜசிங் செல்லதுரை, நிர்வாக பொறுப்பாளர் பீனா ராஜசிங் மற்றும் இயக்குனர் செல்வி. விசித்திரா ராஜசிங் ஆகியோர் சிறப்பான வாழ்த்துரை வழங்கினர். அவர்களின் உரைகள் மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கக்கூடியவையாக இருந்தன.

நிகழ்ச்சியின் சிறப்பம்சமாக, முக்கிய விருந்தினராக குணசிங் செல்லதுரை மெட்டல் பவர் கம்பெனி திருமங்கலம் இயக்குனர் மற்றும் பெல் இண்டஸ்ட்ரீஸ் குழுமத்தின் பங்குதாரர்) உரையாற்றினார். அவரை மூன்றாம் ஆண்டு மாணவி செல்வி. கோகுல்ஸ்ரீ அறிமுகப்படுத்தினார். தனது உரையில்,ஹோட்டல் தொழில்துறையில் தேர்ச்சி பெற உறுதியும், துறையும் முக்கியம் என்பதை வலியுறுத்தினார்.

முக்கிய விருந்தினருக்கு நினைவுப் பரிசும்,பரிசும் நிறுவன இயக்குனர்கள் குழுவால் வழங்கப்பட்டது.

முதல் ஆண்டுக் கல்வி ஆண்டின் தொடக்க நிகழ்வை நிறுவனர் முதல்வர் டாக்டர். லியோ ராபர்ட் ஆர் அவரது நன்றி உரையுடன் நிறைவு செய்தார். அனைத்து பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் விருந்தினர்களின் ஒத்துழைப்புக்கும் அவர் நன்றியை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சி இந்திய தேசிய கீதத்துடன் மதியம் 12.20 மணிக்கு நிறைவு பெற்றது.

பெல் இன்ஸ்டிட்யூட்டின் 19வது ஆரம்ப நாள் விழா, அதன் கல்வித் தரத்தையும், ஹோட்டல் தொழில்துறைக்கான திறமையான தலைமுறையினரை உருவாக்கும் பணி தொடரும் என்பதை உறுதி செய்தது.





# வேலூர் அடுத்த பெருமுகையில் ஸ்ரீ கனக துர்கா மோட்டார்ஸ், மல்டி கார்ஸ் ஷோரூம் திறப்பு விழா

வேலூர், ஜூலை.12-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் அடுத்த பெருமுகை, சென்னை டு பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை அருகே, ஸ்ரீ கனக துர்கா மோட்டார்ஸ், மல்டி கார்ஸ் ஷோரூம் திறப்பு விழா, நிறுவனர் பாலகிருஷ்ணன் சசிகலா, பி.நரேஷ் குமார் சௌமியா ஆகியோர் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளர்களாக வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், மாநகராட்சி மேயர் சுஜாதா, ஊராட்சி மன்ற தலைவர் ஜெ.இ. பாபு, சபாபதி, டாடா மோட்டார்ஸ் எம்.டி. வெங்கட்டரமணா, திமுக வேலூர் ஒன்றிய செயலாளர் ஞானசேகரன் அமுதா, காட்பாடி மாமன்ற உறுப்பினர்கள் சித்ரா மகேந்திரன், ஆகியோர் கலந்துகொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்து குத்துவிளக்கேற்றி இனிப்புகள் வழங்கி திறப்பு விழாவை சிறப்பித்தனர். இதனைத் தொடர்ந்து வாழ்த்துக்கள் தெரிவித்து சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வாடிக்கையாளர்கள், பொதுமக்கள், உறவினர்கள், ஸ்ரீ கனக துர்கா மோட்டார்ஸ் அலுவலக அட்மின் கோபி, சீனியர் மெக்கானிக் ராஜசேகர், சீனியர் பெயிண்டர் மனோஜ், சீனியர் டிங்கர் ராஜி, நிறுவன அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் என பலர் கலந்து கொண்டு திறப்பு விழாவை சிறப்பித்தனர்.

# கீழக்கோட்டை அரசு பள்ளியில் மகிழ் முற்றம் மாணவர் குழுக்களின் பதவியேற்பு விழா







சிவகங்கை, ஜூலை.12-

சிவகங்கை மாவட்டம் காளை யார் கோவில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் மகிழ் முற்றம் மாணவர் குழுக்களின் பதவியேற்பு விழா சிறப்பாக நடைபெற்றது. தலை மை ஆசிரியை தெய்வானை தலைமை வகித்தார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி முன்னிலை வகித்தார். கணித ப்பட்டதாரி ஆசி ரியை மீனாட்சி வரவேற் புரை யாற்றினார். குறிஞ்சி சிவப்பு, முல்லை மஞ்சள், நெய்தல் பச்சை, மருதம் நீலம், பாலை வெள்ளை ஆகிய வண்ணங்களில் அணிகள் பிரிக்கப்பட்டு தலைவர்கள் நியமிக்க ப்பட்டனர். மாணவர் குழு ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் மாணவர் குழு பொறுப்பாசிரியர் மாணவர் குழு மாணவத் தலைவர்கள் வகுப்பு தலைவர்கள் என அனைவருக்கும் தலைமை ஆசிரியை அடையாள பதக்கங்களை வழங்கினார். ஒவ்வொரு மாணவர் குழு தலைவர்களும் தங்களின் கொடிகளை கையில் ஏந்தி அணிவகுத்து பேரணியாக வலம் வந்தனர். பள்ளியில் மாணவர்களின் வருகை கற்றல் திறன் மன்றங்கள் கலைத் திருவிழா ஆகிய அனைத்து செயல்பாடுகளையும் சிறப்பாக செய்திட அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். ஆசிரியை வாசுகி நன்றி கூறினார். கணினி பயிற்றுநர் வித்யா சத்துணவு சமையல் உதவியாளர் அஞ்சலை கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





# தாம்பரத்தில் மாவீரன் அழுகுமுத்து கோன் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தகபட்டது

தாம்பரம், ஜூலை.12-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் இந்திய திருநாட்டின் முதல் சுதந்திர போராட்ட மாவீரன் அழுகுமுத்துகோன் 268வது குருபூஜை விழாவை முன்னிட்டு .தாம்பரம் யாதவர் அறக்கட்டளை சார்பில் தலைவர் எ.எஸ்.மணி தலைமையில், துணை தலைவர் ராமசாமி முன்னிலையில், ஜெகன் வரவேற்புரையில் தாம்பரம் சண்முகம் சாலையில் மலர்களால் அலங்கரித்து வைக்கபட்ட மாவீரன் அழுகுமுத்துகோன் அவர்களின் திருவுருவ படத்திற்க்கு எல்லார் செழியன், ஸ்டார் பிரபா, தில்லைராஜ், கோ.மனோகர், கே.மாணிக்கம், வி.கே.வி.நாராயணன், செந்தில் மற்றும் யாதவ் நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர். பின்னர் பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

முன்னாதாக தாம்பரம் தில்லை பில்டிங் முதல் பேனர் பிடித்தாவறு பேரணியாக சென்று மாவீரன் படத்திற்க்கு மலர் தூவி மரியாதை செலுத்தபட்டது.



# டிராவல்ஸ் கடையில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்பனை கடை ஊழியர் கைது

## கடைக்கு சீல் வைத்து பூட்டிய உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள்

பெருங்களத்தூர், ஜூலை.12-

செங்கல்பட்டு மாவட்டம் பெருங்களத்தூர் பேருந்துநிலையம் ஜி.எஸ்.டி.சாலையில் சஞ்சய் எம்.பி.டி.டிராவல்ஸ் என்ற கடை கூல் பார் இயங்கி வருகிறது. இங்கு தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தன. அதன்பேரில் பீர்க்கன்காரணை போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று ஆய்வு செய்ததில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை பதுக்கி வைத்து விற்பனை செய்வது தெரிய வந்தது.

இதனையடுத்து தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட கான்ஸ், கூல் லீப் உள்ளிட்ட 60 புகையிலை பாக்கெட்களை பறிமுதல் செய்ததோடு, தடை செய்யப்பட்ட டிராவல்ஸ் கடை மற்றும் கூல் பாரை உணவு பாதுகாப்பு அதிகாரிகள் மூலம் சீல் வைத்து மூடினார்.

மேலும் தொடர்சியாக இந்த கடையில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதால் ரூ.1 லட்சம் அபாரதம் விதிக்கப்படுவதுடன், 3 மாதம் கடைக்கும் சீல் வைக்கப்படும் என உணவு பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்



■ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 15/07/2025 அன்று "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் தொடர்பாக தன்னார்வ வாயிலாக விண்ணப்ப படிவம் துண்டு பிரசுரங்களை வழங்கப்பட்டு வரும் பணிகள் குறித்து சிவகங்கை மாவட்ட ஆட்சியர் பொற்கொடி குன்றக்குடி ஊராட்சி உட்பட்ட பகுதியில் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார் உடன் திருப்பத்தூர் வட்டாட்சியர் மாணிக்கவாசகம் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



# பெரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதலாம் ஆண்டு மாணவர்கள் வரவேற்பு நிகழ்ச்சி

செங்கல்பட்டு, ஜூலை.12-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த மண்ணிவாக்கம் பெரி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்ச்சி புதன் கிழமை காலை 10 மணியளவில் கல்லூரி கலை அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பெரி கல்விக் குழுமத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் மாண்பமை சரவணன் பெரியசாமி அவர்கள் தலைமையேற்று விழாவைத் தொடங்கி வைத்தார். பெரி கல்விக் குழும தலைமை செயல் அலுவலர் திருமிகு சசி வீரராஜன் மற்றும் பெரி கலை அறிவியல் கல்லூரி கல்வி இயக்குநர் முனைவர் அ.குணசேகரன் அவர்கள் முன்னிலை வகித்தனர். பெரி கலை அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் அ. புருஷோத்தமன் அனைவரையும் வரவேற்றார்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகப் தமிழ் இலக்கியச் சொற்பொழிவாளரும், சர்வதேச தமிழ்ப் பேச்சாளருமான பேராசிரியர் முனைவர். பர்வீன் சுல்தான் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று முதலாம் ஆண்டு மாணவர்கள் எவ்வாறு சவால்களை எதிர்கொள்ள வேண்டும், வாழ்க்கையை அழகு படுத்துவது கல்வி என்ற கருத்துக்களை மாணவர்கள் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் சிறப்புரை ஆற்றினார்.

முதலாம் ஆண்டு மாணவர்கள் வரவேற்பு நிகழ்ச்சிகான ஏற்பாடுகளை துறை தலைவர்கள் தினேஷ் மற்றும் முனைவர் ம. கோகுலநாதன் ஆகியோர் விழாவினை சிறப்பாக ஒருங்கிணைத்தார்கள் .இந்நிகழ்வில் பெரி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் பேராசிரியர்கள் பங்கேற்று சிறப்பித்தனர். விழாவில் ஆயிரத்திற்கும் அதிகமான முதலாம் ஆண்டு மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். முடிவில் அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

# சென்னை: ரேஷன் கார்டை திருத்த 19 இடங்களில் குறைதீர் முகாம்

சென்னை, ஜூலை.12-

தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: ஜூலை மாதத்துக்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் முகாம், சென்னையில் உள்ள உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 19 மண்டல உதவி ஆணையாளர் அலுவலகங்களில் நாளை (ஜூலை 12) காலை 10 முதல் பிற்பகல் 1 மணி வரை நடைபெறவுள்ளது.

குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கல், முகவரி மாற்றம், கைப்பேசி எண் பதிவு அல்லது மாற்றம் செய்தல் மற்றும் அங்கீகாரச் சான்று உள்ளிட்ட பொதுவிநியோகத் திட்டம் தொடர்பான சேவைகள் மேற்கொள்ளப்படும். மேலும், பொதுவிநியோகக் கடைகளின் செயல்பாடுகள், குறைபாடுகள் குறித்த புகார்களை தெரிவித்து தீர்வு பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தாம்பரம் மாநகராட்சி வரி வசூல் மையத்தை எஸ் ஆர் ராஜா எம்எல்ஏ திறந்து வைத்தார்

தாம்பரம், ஜூலை.12-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம், 5வது மண்டலத்திற்கு உட்பட்ட 45வது வட்டத்தில் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா அவர்கள் ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் தாம்பரம் மாநகராட்சி வரி வசூல் மையத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், 5வது மண்டல குழு தலைவரும், தாம்பரம் மேற்கு பகுதி செயலாளருமான எஸ்.இந்திரன், 45வது வட்ட மாமன்ற உறுப்பினர் கொடி.ஆர்.தாமோதரன், 45வது வட்ட செயலாளர் எம்.சீனிவாசகுமார் மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்




■ உங்களுடன் ஸ்டாலின் முகாம் ஜூலை 15 தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைக்க உள்ளார். அதனை தொடர்ந்து சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி வார்டு எண் 01,02,03 ஆகிய பகுதிகளுக்கு அனுசியா மஹாலில் நடைபெற உள்ளது. இதையொட்டி பட்டத்தரசி,காட்டு உடைகுளம் ஆகிய பகுதிகளில் முகாம் நடைபெறுவதை நேரடியாக இல்லங்களுக்குச் சென்று மக்களின் தேவைகளை மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் நேற்று கேட்டறிந்து வந்தார். இந்நிகழ்வில் நகர் கழக செயலாளர் பொன்னுச்சாமி நகர்மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் வளர்மதி கிருங்காங்கோட்டை கிளைச் செயலாளர் தீபாவளி வட்டாட்சியர் கிருஷ்ண குமார் அரசு துறையினர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# ரோஜா பூங்காவில் உதிராமல் பூத்துக்குலுங்கும் மலர்கள்



ஊட்டி, ஜூலை.12-

ஊட்டி ரோஜா பூங்காவில் முதல் இரு பாத்திகளில் மலர்கள் உதிராமல் உள்ளதால், இதனை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல்கின்றனர். நீலகிரியில் ஆண்டுதோறும் ஜூன் மாதம் தென்மேற்கு பருவமழை துவங்கும். இது, இரு மாதங்களுக்கு மேல் நீடிக்கும்.

இந்த மழையின்போது, சூறாவளி காற்று அதிகமாக காணப்படும். இச்சமயங்களில் ரோஜா பூங்கா செடிகளில் உள்ள ரோஜா மலர்கள் அனைத்தும் உதிர்ந்துவிடும். இதனால், ஜூலை மாதங்களில் ரோஜா பூங்காவில் உள்ள செடிகளில் அதிகளவு மலர்களை காண முடியாது.

இச்சமயங்களில் மலர் செடிகள் மற்றும் புல் மைதானங்களை பராமரிக்கும் பணிகளில் தோட்டக்கலைத் துறையினர் ஈடுபடுவார்கள். இம்முறை தென்மேற்கு பருவமழை மே மாதம் துவங்கிய போதிலும், தொடரவில்லை. துவக்கத்தில் ஒரு சில நாட்கள் மட்டுமே கொட்டியது.

அதன்பின், பெரிதாக மழை பெய்யவில்லை. நாள்தோறும் சாரல் மழை மட்டுமே காணப்படுகிறது. மேலும், காற்றின் வேகமும் சற்று குறைந்தே உள்ளது. துவக்கத்தில் ரோஜா பூங்காவில் உள்ள மலர் செடிகளில் இருந்த மலர்கள் அழுகி உதிர்ந்த போதிலும், அதன் பின் மலர்கள் உதிராமல் உள்ளது.

தற்போது பூங்காவில் உள்ள முதல் இரு பாத்திகளில் உள்ள செடிகளில் மலர்கள் பூத்துள்ளது. சுற்றுலா பயணிகள் வருகை குறைந்து காணப்பட்ட போதிலும், இங்கு பூத்து குலுங்கும் ரோஜா மலர்களை பூங்காவிற்கு வரும் சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல்கின்றனர்.

அதேபோல், புல் மைதானங்கள் பராமரிக்கப்பட்டு வரும் நிலையில், அவைகளும் பச்சை கம்பளம் விரித்தார்போல், பச்சைபசேல் என காட்சி அளிக்கிறது.

# அடிப்படை வசதியின்றி தவிக்கும் அ. வாடிப்பட்டி ஊராட்சி மக்கள்: மாவட்ட நிர்வாகம் தலையிட்டு நடவடிக்கை எடுக்குமா?



தேனி. ஜூலை.12-

தேனி மாவட்டம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம், அ. வாடிப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட இந்திரா காலனி பகுதியில், சுமார் 500க்கும் மேற்பட்ட குடியிருப்புகளில் வசிக்கும் 1000க்கும் மேற்பட்ட பொதுமக்கள், முதியவர்கள், சிறுவர் சிறுமியர் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக அடிப்படை வசதிகளின்றி அவதிப்பட்டு வருகின்றனர். கழிவுநீர் கால்வாய், குடிநீர், மின்சார வசதி, தெருவிளக்குகள் என எவ்வித வசதியும் இன்றி மக்கள் அன்றாட வாழ்வில் பெரும் சிரமங்களைச் சந்தித்து வருகின்றனர்.

இதுகுறித்து அப்பகுதியில் வசிக்கும் நாகராஜ் மற்றும் பிற பகுதிவாசிகள் தெரிவித்ததாவது:

“அ. வாடிப்பட்டி ஊராட்சியானது தேனி மாவட்டத்தின் கடைக்கோடி பகுதியாக இருப்பதால், ஊராட்சி செயலர் மற்றும் அதிகாரிகள் இந்தப் பகுதிக்கு எவ்வித அடிப்படை வசதிகளையும் செய்து தராமல் முழு அலட்சியம் காட்டி வருகின்றனர். இந்திரா காலனி பகுதியில் குடிநீர் மாதத்திற்கு இரண்டு முறை மட்டுமே வருவதால், நாங்கள் குடிநீரின்றி தினந்தோறும் தவித்து வருகிறோம். அருகில் உள்ள வயல்வெளிகளுக்கும், தூரமான இடங்களுக்கும் சென்று குடிநீர் எடுத்து வரும் அவலநிலை நீடிக்கிறது.

சாக்கடை கால்வாய் கட்டி முடிக்கப்பட்டு சுமார் 10 ஆண்டுகளுக்கும் மேலாகியும், இன்று வரை தூர்வாரப்படவோ, சேதமடைந்த பகுதிகள் சீரமைக்கப்படவோ இல்லை. இதனால், கழிவுநீர் கால்வாயில் தேங்கி நின்று, கடும் துர்நாற்றத்தை வீசுவதோடு, கொசுக்களின் உற்பத்தியை அதிகரித்து, சுகாதாரச் சீர்கேட்டை உருவாக்கி வருகிறது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் டெங்கு, மலேரியா போன்ற பல்வேறு நோய்களுக்கும், தோல் வியாதிகளுக்கும் ஆளாகி வருகின்றனர். ஆனால், சுகாதார ஆய்வாளர் மற்றும் பணியாளர்கள் இந்தப் பகுதிக்கு வருவதேயில்லை. மக்களின் அடிப்படை சுகாதாரத்தைக் காக்க வேண்டிய பொறுப்பில் இருக்கும் அதிகாரிகளின் இந்த அலட்சியம் பெரும் கண்டனத்திற்குரியது.

குடிநீர் குழாய்கள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் பொது இடங்கள் அனைத்தும் கருவேல மரங்கள் மற்றும் புதர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு, புழு பூச்சிகளின் புகலிடமாக மாறியுள்ளன. இதனால், தண்ணீர் பிடிக்கும்போது விஷப்பூச்சிக் கடிக்கு ஆளாகும் அச்சம் நிலவுகிறது. மேலும், பெரும்பாலான தெருவிளக்குகள் எரியாததால், இரவு நேரங்களில் இந்தப் பகுதி முழுவதும் இருளில் மூழ்கி, சமூக விரோதச் செயல்கள் நடப்பதற்கும், பெண்கள், குழந்தைகள் வெளியே செல்லவும் அஞ்சும் நிலை உள்ளது.

இந்தப் பகுதியில் முறையாக தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்படாததால், குப்பைகள் ஆங்காங்கே குவிந்து கிடக்கின்றன. இதுவும் சுகாதாரச் சீர்கேட்டிற்கு முக்கிய காரணமாக அமைகிறது. ஊராட்சி செயலர் மற்றும் அதிகாரிகளிடம் பலமுறை முறையிட்டும் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. மாவட்ட ஆட்சியர் மற்றும் உயரதிகாரிகள் இந்தப் பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டு, மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை விடுக்கிறோம். தேர்தல் காலங்களில் மட்டும் வாக்கு சேகரிக்க வரும் மக்கள் பிரதிநிதிகள், அதன் பிறகு எங்களைப் போன்ற கிராமப்புற மக்களின் அவலநிலையைக் கண்டுகொள்வதில்லை என்பதும் வேதனையான உண்மை,” என்று ஆதங்கத்துடன் தெரிவித்தனர்.

இந்திரா காலனி மக்களின் இந்தக் குரல் மாவட்ட நிர்வா கத்தின் செவிகளை எட்டுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



# பம்மல் வடக்கு பகுதி திமுக சார்பில் இல்லம் தேடி உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சி

செங்கல்பட்டு, ஜூலை.12-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பம்மல் வடக்கு பகுதி திமுக சார்பில் இல்லம் தேடி உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சி பம்மல் வடக்கு பகுதி கழக செயலாளர் ஜெய்குமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மேயர் வசந்தகுமாரி, துனை மேயர் காமராஜ், மண்டல குழுத் தலைவர்கள் வே.கருணாநிதி, ஜோசப் அண்ணாதுரை கலந்து கொண்டு வீடு வீடாக சென்று திமுக ஆட்சியில் கொண்டு வந்த பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து எடுத்து கூறி திமுகவில் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது. இதில் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் உட்பட ஏராளமான திமுகவினர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அல்லிநகரம் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில்

# ரூ.170.88 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடங்களை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்

தேனி, ஜூலை.12-

தமிழ்நாடு முதலமைச்சர் அன்று (11.07.2025) சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் தேனி மாவட்டம், அல்லிநகரம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் ரூ.170.88 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடங்களை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, அல்லிநகரம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், புதிதாக கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டடத்தில் குத்துவிளக்கேற்றி வைத்து பார்வையிட்டார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், பள்ளி மாண வர்களின் கல்வி தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், அரசு பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகங்கள், குடிநீர் வசதி, கழிவறைகள், மின்சாதன வசதிகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் திறன் வகுப்பறைகள் (Smart Class) அமைத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்தவகையில் இன்றைய தினம், அல்லிநகரம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் ரூ. 170.88 இலட்சம் மதிப்பீட்டில் தரைதளத்தில் நவீன வகுப்பறையுடன் (Smart Class) 3 வகுப்பறைகளும், முதல் தளத்தில் 3 வகுப்பறைகளும், இரண்டாம் தளத்தில் 2 வகுப்பறைகளும் என மொத்தம் 8 கூடுதல் வகுப்பறைகள் சுகாதாரமான குடிநீர் மற்றும் மின்சார வசதியுடன் கட்டப்பட்டு இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் .பிரபு, உதவி செயற்பொறியாளர் .செந்தில்குமார் மற்றும் பள்ளி தலைமையாசிரியர், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அணைக்கட்டு அடுத்த வெட்டுவாணம் ஸ்ரீ எல்லையம்மன் திருக்கோயிலில் திருவிழா ஆய்வு கூட்டம்




வேலூர், ஜூலை.12-

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, பள்ளிகொண்டா அடுத்த வெட்டுவாணம் ஸ்ரீ எல்லையம்மன் திருக்கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதம் முதல் வெள்ளி தொடங்கி 9 வாரங்கள் வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பல்வேறு பகுதிகளிலிருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை புரிந்து அம்மனை வழிபட்டு செல்கின்றனர்.

ஆடி மூன்றாம் வெள்ளிக்கு அடுத்த சனிக்கிழமை முதல் பத்து நாட்களுக்கு பிரம்மோற்சவ விழாவும் நான்காம் வெள்ளியன்று தேர் திருவிழாவும், 5ஆம் வெள்ளி தெப்பத் திருவிழாவும், 6ஆம் வெள்ளி இலட்ச தீபத்திருவிழா உள்ளிட்ட விழாக்கள் நடைபெறுவது வழக்கம்.

இந்த ஆண்டுக்கான ஆடி வெள்ளி திருவிழா 18. 7 .2025 முதல் 14. 9. 2025 வரை நடைபெறவுள்ளது. இத்திருவிழா வை முன்னிட்டு விழா முன்னேற்பாடுகள்

ஆலோசனைக் கூட்டம் 10072025 வியாழக்கிழமை மாலை வெட்டுவாணம் ஸ்ரீ எல்லையம்மன் கோயில் வளாகத்தில் அணைக்கட்டு தாசில்தார் வேண்டாம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துணை தாசில்தார் சுகந்தி, பள்ளிகொண்டா காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் சிவக்குமார், துணை தலைவர் வசீம் அக்ரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வெட்டுவாணம் எல்லையம்மன் கோயில் செயல் அலுவலர் நடராஜன் வரவேற்று சிறப்புரையாற்றினர்.

அப்போது, தாசில்தார் வேண்டா பல்வேறு துறைகள் மூலம் செய்யப்பட வேண்டிய முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடு குறித்த கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு எடுத்து கூறினார். இதில் குடிநீர் வசதி, தெருவிளக்கு, குப்பைகளை அகற்றி சுத்தம் மேற்கொள்ளுதல், தற்காலிக கழிவறைகள் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள டவுன் பஞ். நிர்வாகத்திற்கு வேண்டுகோள் விடுத்தார்.

மேலும், தேசிய நெடுஞ்சாலைகளில் பேரிகார்டுகள் அமைத்து கூட்ட நெரிசலை கட்டுப்படுத்தவும் கேட்டுக் கொண்டார். ஆடித்திருவிழா நாட்களில் வேலூர், குடியாத்தம், அணைக்கட்டு, ஆம்பூர் உட்பட மற்ற பகுதிகளிலிருந்து கூடுதல் பஸ்களை இயக்கவும், சென்னை, பெங்களூரு, சேலம், தரம்புரியிலிருந்து இந்த வழியாக செல்லும் அரசு பஸ்களை ஆடி மாதம் முழுவதும் வெட்டுவாணம் பஸ் நிறுத்தத்தில் நின்று செல்ல வேண்டுமென போக்குவரத்து துறை அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.

தீயணைப்பு துறை வாகனம், சுகாதாரத்துறை மூலம் ஆம்புலன்ஸ் உட்பட அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பான முறையில் செய்திட வேண்டும். மேலும் வெட்டுவாணம் தேசிய நெடுஞ்சாலையில் பிரதான கோயிலுக்கு செல்லும் சாலையில் மேம்பாலம் கட்டும் பணி நடைபெறுவதால் கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த கூடுதல் போலீசார் அந்த பகுதியில் நியமிக்க வேண்டுமென அதிகாரிகளுக்கு உத்திரவிட்டார்.

இதனை தொடர்ந்து பொதுமக்கள் கூறியதாவது கோயிலுக்கு வரும் பக்தர்களை வழிமறித்து திருநங்கைகள் வேப்பிலையால் மந்திரம் போடுவதை தடுக்க வேண்டும், திருவிழா நடக்கும் இரண்டு மாதங்களுக்கு வெட்டுவாணம் பகுதியில் புறக்காவல் நிலையம் அமைக்க வேண்டும், திருவிழாவிற்கு வரும் பக்தர்கள் வரும் சாலையில் தண்ணீர் தேங்காமல் இருக்க தற்காலிக சாலை அமைத்து தர வேண்டும் .உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வை த்தனர். இறுதியில் கோயில் கணக்காளர் சரவணபாபு நன்றியுரையாற்றி இக்கூட்டம் நிறைவுபெற்றது.

# அய்யலூரில் களைகட்டியது ஆடி ஸ்பெஷல் சந்தையில் ஆடு விற்பனை ரூ.2 கோடி

வேடசந்தூர், ஜூலை.12-

ஆடி மாத கோயில் திருவிழாக்கள் நெருங்கும் நிலையில் அய்யலூரில் நடைபெற்ற சிறப்பு ஆட்டுச்சந்தையில் நேற்று ஒரே நாளில் ரூ.2 கோடிக்கு ஆடு, கோழிகள் விற்பனையானது.

திண்டுக்கல் மாவட்டம், அய்யலூரில் வாரந்தோறும் வியாழக்கிழமை ஆடு, கோழி சந்தை நடப்பது வழக்கம். இங்கு திண்டுக்கல் மாவட்டம் மட்டுமின்றி மதுரை, திருச்சி, கரூர், புதுக்கோட்டை உள்ளிட்ட வெளிமாவட்டங்களில் இருந்தும் வியாபாரிகள் வந்து ஆடு, கோழிகளை ஆர்வமுடன் வாங்கி செல்வர்.

வரும் ஆடி, ஆவணி மாதங்களில் கிராமங்களில் கோயில் திருவிழாக்கள் நடைபெறுவது வழக்கம். இதனால் அய்யலூரில் நேற்று காலை நடைபெற்ற சிறப்பு ஆட்டுச்சந்தை களைகட்டியது. அதிகாலை முதலே ஏராளமான கால்நடை வளர்ப்போரும், வியாபாரிகளும் குவிந்தனர். வியாபாரிகள் போட்டி போட்டு கொண்டு ஆடு, கோழிகளை வாங்கி வாகனங்களில் ஏற்றி சென்றனர்.

10 கிலோ வெள்ளாடு தரத்துக்கேற்ப ரூ.7,000 முதல் ரூ.8,000 வரையிலும், செம்மறி ஆடு ரூ.6,500 முதல் ரூ.7,000 வரையிலும் விற்கப்பட்டது. ஒரு கிலோ எடையுள்ள நாட்டுக்கோழி ரூ.450 முதல் ரூ.550 வரையிலும், சண்டை சேவல்கள் ரூ.15 ஆயிரம் வரையிலும் விற்கப்பட்டது.

நேற்று ஒரே நாளில் மொத்தம் ரூ.2 கோடிக்கு ஆடு, கோழிகள் விற்கப்பட்டதாக வியாபாரிகள் தெரிவித்தனர். இதுகுறித்து அவர்கள் மேலும் கூறுகையில், ‘‘ஆடி, ஆவணி மாதங்களில் கிராமப்புறங்களில் கோயில் திருவிழாக்கள் அதிகளவில் நடைபெறுவது வழக்கம். இதனால் நேற்று சந்தை களைகட்டியது. வரும் வாரங்களில் சந்தையில் விற்பனை மேலும் சூடு பிடிக்கும்’’ என்றனர்.




# மேட்டமலை யாதவர் மகா சபை சார்பில் ஏற்பாடு செய்திருந்த மாவீரர் அழகுமுத்து கோன் 268வது குருபூஜை விழா

சாத்தூர், ஜூலை.12-

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் சாத்தூர் சண்முகக்கனி கலந்து கொண்டு மாவீரர் அழகுமுத்து கோன் திருஉருவப்படத்திற்க்கு மலர்கள் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வில் மேட்டமலை கிளை கழக செயலாளர் செந்தூர், அம்மா பேரவை கண்ணன், எம்ஜிஆர் இளைஞரணி வேல்முருகன், கிளை செயலாளர் எம்ஜிஆர் நைனா(எ)சுந்தர் ராஜ்,கழக பிரமுகர்கள்மற்றும் யாதவ சமுதாய பெரியோர்கள் கலந்து கொண்டனர்.

இதற்கான ஏற்பாடுகளை முனியசாமி யாதவ், கோபால கிருஷ்ணன் யாதவ், முன்னாள் ராணுவ வீரர் சுப்புராஜ்,கண்ணன் யாதவ் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தினார்.




# குடியாத்தம் பிச்சனூர் பேட்டை ஸ்ரீ காளியம்மன் திருக்கோயில் தேர் திருவிழா முன்னிட்டு அழைப்பிதழை ஏ.சி.எஸ்ுக்கு வழங்கி அழைப்பு

வேலூர், ஜூலை.12-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரம் பிச்சனூர் பேட்டை அருள்மிகு ஸ்ரீ காளியம்மன் திருக்கோயில் 26ஆம் ஆண்டு தேர் திருவிழா முன்னிட்டு, நாள் முழுவதும் மாபெரும் அன்னதான நிகழ்ச்சிக்கு வருகை தரும்படி புதிய நீதிக்கட்சி நிறுவனத் தலைவர் நெசவாளர்களின் பாதுகாவலர் டாக்டர். ஏ.சி.சண்முகம் மற்றும் செயல் தலைவர் ஏ.ரவிக் குமார், துணைப் பொதுச் செயலாளர் ஏ.சி.எஸ். அருண்குமார் அவர்களுக்கு நிகழ்ச்சியின் அழைப்பிதழை குடியாத்தம் நகரச் செயலாளரும், கைத்தறி காவலன் எஸ். ரமேஷ், தகவல் தொழில்நுட்ப செயலாளர் மான்ஸ்டர் பிரவீன் குமார் திருவிழா அழைப்பிதழை வழங்கினர். ஒன்றிய செயலாளர் சீனிவாசன் ஏ.சி.எஸ். பேரவை நகரச் செயலாளர் சசிகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.



# புரட்சிமிகு வேலூரில் சிப்பாய புரட்சி நினைவுத்தூன் அருகே மலர் வளையம் வைத்து மலர் தூவி வீர வணக்கம் செலுத்தினர்

வேலூர், ஜூலை.12-

வேலூர் மாவட்டம், வேலூர் கோட்டை வடகிழக்கு பகுதியில், புரட்சிமிகு வேலூரில் 1806 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 10 ஆம் நாள் நடைபெற்ற சிப்பாய் புரட்சியில் வீர மரணம் அடைந்த இந்திய வீரர்களுக்கு வேலூர் மக்கான் சந்திப்பில் அமைந்துள்ள சிப்பாய் புரட்சி நினைவுத்தூண் அருகே சமூக ஆர்வலரும், பத்திரிகை செய்தி உதவி ஆசிரியர் மற்றும் தென்னிந்திய பத்திரிகையாளர் சங்கத்தின் ஒருங்கிணைந்த மாவட்ட தலைவருமான டாக்டர். ராஜ்பாபு மலர் தூவி நினைவஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்வின்பொது மூத்த செய்தியாளர்கள், செய்தியாளர்கள் புகைப்பட கலைஞர்கள், செய்தி குழுவினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# அருள்மிகு சொர்ணவாரீஸ்வரர், அருள்மிகு சாந்தநாயகி அம்மன் கோயில் ஆனி பிரம்மோற்சவ விழா தேரோட்டத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர்

சிவகங்கை, ஜூலை.12-

சிவகங்கை சமஸ்தானம், தேவஸ்தான நிர்வாகத்துக்குட்பட்ட சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள மேலநெட்டூர் கிராமத்தில் அருள்கூர்ந்து வரும் அருள்மிகு சொர்ணவாரீஸ்வரர், அருள்மிகு சாந்தநாயகி அம்மன் கோயில் ஆனி பிரம்மோற்சவ விழா தேரோட்டத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர். கடந்த 30ம் தேதி கொடியேற்றத்துடன் விழா துவங்கியது. விழாவின் முக்கிய நிகழ் ச்சியான திருக்கல்யாணம் நடைபெற்றது. தேரோட்ட விழாவிற்காக கோயில் முன்இருந்த பெரிய தேரில் சொர்ண வாரீஸ்வரரும், சிறிய தேரில் சாந்தநாயகி அம்மனும் எழுந்தருளினர். தேர்களுக்கு முன்பு விநாயகரும், பின்பு வள்ளி, தெய்வானையுடன் முருகனும் எழுந்தருளினர். இதனைத் தொடர்ந்து மேலநெட்டூர் மற்றும் சுற்றுவட்டார கிராமப் பகுதிகளை சேர்ந்த பக்தர்கள் தேரை இழுந்தனர். தேர் நிலையை அடைந்தவுடன் விளை நிலங்களில் விளைந்த காய்கறிகள் மற்றும் தேங்காய் உள்ளிட்டவற்றை சுவாமிக்கு படைத்து வழிபட்டனர்.

# ஜூலை 19 முதல் 9 நாட்கள் குற்றாலம் சாரல் விழா தென்காசி மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு

தென்காசி, ஜூலை. 12-

தென்காசி மாவட்டம் குற்றாலம் சாரல் திருவிழா வருகின்ற 19ஆம் தேதி தொடங்கி 9 நாட்கள் நடைபெறும் தென்காசி மாவட்ட கலெக்டர் ஏ.கே. சுமல்கிஷோர் அறிவித்துள்ளார்.

பல்வேறு பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுடன் வெகு விமர்சையாக நடத்த திட்டம். தென்மேற்கு பருவமழை பொழியும் காலங்களான ஜூன், ஆகஸ்ட் மாதங்களில் தென்காசி மாவட்டத்தில் உள்ள குற்றாலத்தில் மழைக்கால சீசன் களை கட்டுவது வழக்கம்.

அந்த வகையில், தற்போது மழைக்கால சீசன் தொடங்கியுள்ளது மழைக்கால சீசன் காலகட்டங்களில்




குற்றாலத்திற்கு வரும் சுற்றுலாப் பணிகளை கவரும் வகையில் பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களுடன் இந்த வருடத்திற்கான சாரல் திருவிழா வருகின்ற ஜீலை 19ம் தேதி தொடங்கப்பட உள்ளதாக தென்காசி மாவட்டகலெக்டர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் போது கூறியதாவது: வருடம்தோறும் சீசன் காலகட்டங்களில் குற்றாலத்தில் கொண்டாடப்படும் குற்றால சாரல் திருவிழா வானது இந்த வருடம் வருகின்ற 19 ஆம் தேதி தொடங்கி 27 ம்தேதி வரை 9 நாட்கள் நடைபெறும். இதில் தமிழக அமைச்சர்கள் பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

இந்த சாரல் திருவிழா வின்போது பரதநாட்டியம் நையாண்டி மேளம் கரகாட்டம் திரைப்பட மெல்லிசை கொழுகொழு குழந்தைகள் போட்டி யோகா நாட் டியம் வில்லிசை படகு போட்டி கர்நாடக மாநில கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் கொடைக்கானல் பழங்குடியின மக்களின் தோடர் நடனம் பள்ளி மாணவர்களுக்கான பேச்சு கட்டுரை ஓவியம் கவிதை போட்டி பாட்டு போட்டி திருநங்கைகளுக்கான பல்சுவை நிகழ்ச்சி கணியான் கூத்து கோலப் போட்டி பளு தூக்குதல் ஆணழகன் கன் போட்டி நாய் கண்காட்சி மற்றும் மயிலாட்டம் ஒயிலாட்டம் உள்ளிட்ட பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டு சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் பல்வேறு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், ஐந்தருவி பகுதியில் உள்ள சுற்றுச் சூழல் பூங்காவில் தோட்டக் கலைத்துறை சார்பில் வருகின்ற 19ஆம் தேதி முதல் 22ஆம் தேதி வரை 4 நாட்கள் மலர் கண்காட்சி நடைபெற உள்ளதாகவும் இந்த வருடம் வெகு சிறப்பாக சாரல் திருவிழாவை சிறப்பான முறையில் நடத்திட அனைத்து வகையான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட தெரிவித்தார். கலெக்டர்

இந்த பத்திரிகையாளர் சந்திப்பின்போது மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் எடிசன் உள்ளிட்டோர்

# டி.கடன்பன்குளம் கிராமத்திற்கு 2025-2026 நிதியாண்டில் அரசு கட்டிடம் கட்ட கட்டப்படுமா?

## எதிர்பார்ப்பில் பொதுமக்கள்




விருதுநகர், ஜூலை.12-

விருதுநகர் மாவட்டம் திருச்சுழி வட்டம், நரிக்குடி ஒன்றியம், டி. கடம்பன்குளம் பஞ்சாயத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் பஞ்சாயத்து நிதி மற்றும் எம்எல்ஏ மற்றும் எம்பி நிதியிலிருந்து கடம்பன்குளம் கிராமத்திற்கு எந்த ஒரு வளர்ச்சி திட்ட பணியும் நடைபெறவில்லை. குறிப்பாக நாடக மேடை,நூலக கட்டிடம் இதுவரை ஏற்படுத்தித் தரவில்லை என்று பொதுமக்கள் வேதனை தெரிவித்துள்ளனர். மேலும் 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தை தவிர மற்ற எந்த பணியும் நடைபெறவில்லை. இங்கு வசிக்கும் மக்கள் அனைவரும் பட்டியல் சாதியைச் சேர்ந்தவர்கள் என்பதால் ஆதிக்க சாதி வெறியோடு நடந்து கொள்கின்றனர் பஞ்சாயத்து நிர்வாகம் மற்றும் ஒன்றிய அலுவலகம். ஏற்கனவே டி.கடம்பன்குளம் பஞ்சாயத்து நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட கடம்பன்குளத்தில் உள்ள கலைவாணி வீடு முதல் சக்தி வீடு வரை பேவர் பிளாக் சாலை அமைக்கும் திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் அந்த நிதியை முறைகேடாக கிழவிகுளம் கிராமத்திற்கு அந்த நிதி செலவு செய்யப்பட்டு விட்டது. தற்போது மீண்டும் ஒன்றிய நிதியிலிருந்து அதே திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டு தற்போது ரோடு போடும் பணி நடைபெற உள்ளது. எனவே இந்த பணி நடைபெற கூடாது ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிதியும் சேர்த்து டி.கடம்பன்குளம் கிராமத்திற்கு பயன்படுத்த வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். இது குறித்து வட்டார வளர்ச்சி அலுவலர் வாசுகி தொடர்பு கொண்டபோது 2025-2026 நிதியாண்டில்

டி.கடம்பன்குளம் கிராமத்திற்கு அரசு கட்டிடம் அமைக்கப்படும் என்று உறுதி கூறினார்.

# வேலூரில், அரசுக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்தும் அரசு பேருந்து ஓட்டுநர் மற்றும் நடத்துனர்

## ஏழை எளிய மக்கள் இரவு நேரங்களில் மணி கணக்கில் பேருந்திற்கு காத்திருந்து ஏமாற்றம்

வேலூர், ஜூலை.12-

வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு, குடியாத்தம் டு வேலூர் செல்லும் அரசு பேருந்துகள் இரவு 9.30 மணிக்கு மேல் செதுவாலை, பொய்கை ஊருக்குள் எந்த பேருந்துகளும் செல்வதில்லை என பொதுமக்கள் வேதனை அதே போல் 09072025 இரவு 10.10 க்கு ஒரு சிலபேருந்தை செதுவாலை பைபாசில் 5 பயணிகள் நிருத்தினால் நிற்காமல் சென்ற பேருந்துகள் பயணிகள் வேறு ஒரு பேருந்தில் வந்து வேலூர் பேருந்து நிலையத்தில் வந்து குடியாத்தம் பணிமனையில் இருந்து இயக்கப்படும் 444 வண்டி எண் ஜிழி 23:ழி: 2952 என்ற பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் இடம் கேட்டல் இந்த பேருந்து எங்கும் நிற்க வைக்க முடியாது நீங்கள் யாரிடம் ஸ்டாலினிடம் வேண்டுமானாலும் போய் சொல்லுங்கள் எங்களுக்கு பயம் கிடையாது எங்களை யாரும் ஒன்றும் செய்ய முடியாது என்று அநாகரீகமாகவும், தெனாவட்டுளாக




பேசுகிறார்கள், யார் யார் பேருந்து காத்திருப்பார்கள் ஏழை எளிய மக்கள் இரு சக்கர வாகனம் கார் இல்லாதவர்கள் மட்டுமே அரசு பேருந்து நம்பி வருகின்றனர் இரவு வேளையில் சிரமப்படும் பொதுமக்கள். அதேபோல் பொதுமக்கள் பயணத்திற்கு இயக்கப்படும் பேருந்துகள அல்லது ஓட்டுநர் நடத்துனர் வசதிக்காக இயக்கப்படும் பேருந்துகள அரசுக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்தும் விதத்தில் நடந்து கொள்ளும் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கபடும் நிர்வாகம் என்பது பஸ் பயணிகளின் எதிர்பார்ப்பு... உயர் பதவி ஊழியர்கள் இதுபோன்று ஏதேனும் புகார்கள் வந்தால் கிடைத்தது டா சான்ஸ் என்று அவர்களிடம் கையூட்டு பெற்றுக் கொண்டு பல்வேறு நாடகங்களை அரங்கேற்றி திசை திருப்பி பழையகுருடி கதவைத்தரடி என்ற பழமொழி போல் எல்லா இடங்களிலும் யாருமே கண்டு கொள்வதில்லை இது தொடர் கதையாகவே உள்ளது. உயர் பதவி ஊழியர்கள் யாரும் கண்டு கொள்வதில்லை, தமிழக அரசு போக்குவரத்து துறை இருந்து இந்த அவல நிலையை நீடிக்காமல், அரசுக்கு அவப்பெயரை உருவாக்கும் இது போன்ற நடத்துனர் மற்றும் ஓட்டுநரை நிரந்தரமாக வீட்டுக்கு அனுப்பி அரசு போக்குவரத்து விதிமுறைப்படி செயல்பட வேண்டும் என்றும் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# சிவகங்கை மாவட்டத்தில் அரசு பள்ளிகளில் மகிழ் முற்றம் திட்டம் தொடக்கம்

சிவகங்கை, ஜூலை. 12-

தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடம் தலைமைப் பண்பை வளர்க்கும் விதமாக ரூ.2 கோடியில் ‘மகிழ் முற்றம்’ என்ற திட்டத்தின் கீழ் மாணவர் குழுக்கள் உருவாக்கப்பட உள்ளன.

இது குறித்து பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் ச.கண்ணப்பன், அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கை விவரம்: தமிழகத்தில் அனைத்து விதமான பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களிடம் தலைமைப் பண்பை வளர்க்கும் வகையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் பெயர்களில் மாணவர் குழுக்கள் அமைத்து மாணவர் தலைவர் மற்றும் மாணவ அமைச்சர்கள் தேர்வு செய்யப்படுவர். இதன் மூலம் மாணவர்களிடம் அரசியல் அறிவு சார்ந்த அனுபவங்கள் மற்றும் ஆளுமைத் திறன் மேம்பட மாதிரி சட்டப்பேரவை, நாடாளுமன்றம் நடத்தப்படும். இதற்காக தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும். இந்தத் திட்டம் ரூ.2 கோடி



மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்று தமிழக சட்டப்பேரவை அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதை செயல்படுத்தும் விதமாக அரசுப் பள்ளிகளில் மாணவர் குழு அமைப்பினை ‘மகிழ் முற்றம்’ என்ற பெயரில் நடைமுறைப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. குழுவாக இணைந்து செயல் படுதல், சமூக மனப்பான்மை, வேற்றுமைகள் இல்லாத பரஸ்பர ஆதரவு ஆகியவை இந்த அமைப்பின் நோக்கமாகும். மகிழ் முற்றம் மாணவர் குழு கட்டமைப்பின் கீழ் பள்ளியில் உள்ள அனைத்து மாணவர்கள், ஆசிரியர்கள் குறிஞ்சி, முல்லை உட்பட 5 குழுக்களாக பிரிக்கப்படுவர். இக்குழு அமைப்பில் 1 முதல் 12ம் வகுப்பு வரை உள்ள அனைத்து மாணவர்களும் இடம்பெறுவர். ஒவ்வொரு வகுப்பிலும் பயிலும் மாணவர்கள் இந்த குழுக்களில் சேர்க்கப்பட்டு அதன் விவரம் எமிஸ் தளத்தின் மூலமாக கண்காணிக்கப்படும்.

அதை செயல்படுத்தும் விதமாக அரசுப் பள்ளிகளில் மாணவர் குழு அமைப்பினை ‘மகிழ் முற்றம்’ என்ற பெயரில் நடைமுறைப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. குழுவாக இணைந்து செயல்படுதல், சமூக மனப்பான்மை, வேற்றுமைகள் இல்லாத பரஸ்பர ஆதரவு ஆகியவை இந்த அமைப்பின் நோக்கமாகும். மகிழ் முற்றம் மாணவர் குழு கட்டமைப்பின் கீழ் பள்ளியில் உள்ள அனைத்து மாணவர்கள், ஆசிரியர்கள் குறிஞ்சி, முல்லை உட்பட 5 குழுக்களாக பிரிக்கப்படுவர். இக்குழு அமைப்பில் 1 முதல் 12ம் வகுப்பு வரை உள்ள அனைத்து மாணவர்களும் இடம்பெறுவர். ஒவ்வொரு வகுப்பிலும் பயிலும் மாணவர்கள் இந்த குழுக்களில் சேர்க்கப்பட்டு அதன் விவரம் எமிஸ் தளத்தின் மூலமாக கண்காணிக்கப்படும்.

இதுதவிர பள்ளியில் உள்ள ஒரு ஆசிரியர் மகிழ் முற்றம் என்ற மாணவர் குழு அமைப்புக்கான பொறுப்பாசிரியராக நியமிக்கப்பட வேண்டும். மற்ற ஆசிரியர்களுக்கு குலுக்கல் முறையில் குழுவானது ஒதுக்கப்படும். ஒவ்வொரு குழுவுக்கும் உயர்வகுப்பில் பயிலும் மாணவர்களில் இருவர் தலைவர்கள் நியமிக்கப்பட வேண்டும். அதேபோல், வகுப்பு வாரியாகவும் அந்தக் குழுவின் மாணவர் தலைவர் தேர்வு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு குழுவுக்கான மாணவர் தலைவர்கள், வகுப்பு தலைவர்கள், தலைமை பொறுப்பு ஆசிரியர், குழுவுக்கான பொறுப்பு ஆசிரியர்கள் ஆகியோரின் பதவி ஏற்பு விழா அனைத்து பள்ளிகளிலும் 11/07/2025 அன்று நடைபெறுவதை தலைமை ஆசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும்.

சிவகங்கை மாவட்டத்தில் 14 மகிழ் முற்றம் மாணவர் குழு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள கீழநெட்டூர் அரசு நடுநிலைப் பள்ளியில் மகிழ் முற்றம் மாணவர் குழு அமைப்பு குறித்து மாணவர்களிடம் எடுத்துரைக்கப்பட்டது .இதில் கீழநெட்டூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் (பொறுப்பு)மல்லிகா மற்றும் ம.புகழேந்தி பட்டதாரி ஆசிரியர் ப.நரேந்திரன் பட்டதாரி ஆசிரியர் ச.ஜோதிமஞ்சு இடைநிலை ஆசிரியர் சு.இராஜேஸ்வரி இடைநிலை ஆசிரியர் ஆசிரியர்கள் மாணவர்கள் உடனிருந்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161